# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


2025, செத்தெம்பர் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2025 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,
## சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.- ஒ 30/2025

**1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "நீக்கப்பட்ட சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1986 ஆண்டின் 4 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினை நீக்குதல்

**3.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்து-

ஐயத்தை தவிர்தல்

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் சனாதிபதிக்கு அல்லது முன்னாள் சனாதிபதியின் கைம்பெண்ணுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடம் அல்லது செலுத்தப்பட்ட மாதாந்த படி;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் சனாதிபதிக்கு அல்லது முன்னாள் சனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த செயலகப் படித்தொகை, வழங்கப்பட்ட அலுவலக போக்குவரத்து மற்றும் அத்தகைய வேறு வசதிகள்; அத்துடன்

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் சனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப் பட்ட மாதாந்த ஓய்வூதியம்,

என்பன இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும் அதன் பின்னரும் இனிமேல் வழங்கப்படுதலாகாது அல்லது செலுத் தப்படுதலாகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.